தலைஞாயிறு, வேதாரண்யம் ஒன்றிய கடலோரப் பகுதிகளில் மீனவர் வழிகாட்டி விளக்குகள்.

613—(*வினா எண் 11903) திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறு, வேதாரண்யம் ஒன்றியத்தின் கடலோரப் பகுதிகளில் மீனவர் வழிகாட்டி விளக்குகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தலைஞாயிறு பஞ்சாயத்து ஒன்றியப் பகுதியில் வானவன்மாதேவி என்னுமிடத்தில் வழிகாட்டி விளக்கு இயங்கி வருகிறது. வேதாரண்யப் பஞ்சாயத்து ஒன்றியப் பகுதியில் ஆற்காட்டுத் துறை கிராமத்தில் வழிகாட்டி விளக்கு அமைக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, இப்போது இரண்டு இடங்களில் வழிகாட்டி விளக்குகள் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவை சரியாக இயங்கவில்லை. அதோடு, வெள்ளப்பள்ளம், வானவன்மாதேவி, கோடியக்கரை ஆகிய பகுதிகளில், வானவன் மாதேவியில் அந்த விளக்கு இருக்கிறது. வெள்ளப்பள்ளத்திலேயும் கோடியக்கரையிலேயும் அது இல்லை. எனவே, உடனடியாக எரியாத விளக்குகளை எரிய வைக்கவும், எரிகிற மாதிரி இரண்டு விளக்குகளை அந்தப் பகுதிகளுக்கு அமைக்க உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, எங்கு விளக்கு எரியவில்லையோ அதுபற்றி புகார் எழுதிக் கொடுத்தால் அது நிச்சியமாக கவனிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் அதுபோன்ற விளக்குகள் தஞ்சை மாவட்டத்தில் 17 இடங்களில் எங்கெங்கு அமைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டு, 7 இடங்களில் இப்போது கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மீதி 10 இடங்களில் வேலை நடந்து வருகிறது. அதிலே மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற ஊர் இல்லை.

திண்டுக்கல்லில் கள்ளர் சீரமைப்பு விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள்.

614—(*வினா எண் 12304): திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகரில் உள்ள கள்ளர் சீரமைப்பு இரு விடுதிகளுக்கு (1 ஆண், 1 பெண்) சொந்த கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?